(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(10).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 ஒக்தோபர் 06 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 ஒக்தோபர் 17, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2329/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூலை 25 ஆம் திகதிய 2342/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 மே 31 ஆம் திகதிய 2334/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூலை 13 ஆம் திகதிய 2340/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 மே 31 ஆம் திகதிய 2334/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 16 ஆம் திகதிய 2336/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 30 ஆம் திகதிய 2338/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2, 12, 22 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைக்கு குடிபானமல்லாத ஸ்பிரித்துகளை இறக்குமதி செய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துதல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 16 ஆம் திகதிய 2336/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2023)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 30 ஆம் திகதிய 2338/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2023)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் உடன்பாட்டுடன் பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 21 ஆம் திகதிய 2341/63 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2347/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2023 ஒக்தோபர் 19, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2023, ஒக்தோபர் 20, வெள்ளிக்கிழமை)**

2399/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அநுராதபுர மாவட்டத்தில் வாவிகளுக்கு/நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்ட நன்னீர் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மூலம் பெறப்பட்ட மீன் அறுவடை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வாவிகளுக்கு/நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெறப்பட்ட மீன் அறுவடை தொடர்பில் திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(iii) சிறிய வாவிகளைச் சார்ந்ததாக நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2401/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிரப்பு நிலையங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிரப்பு நிலையங்களுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்தியன் எண்ணெய்க் கம்பனி ஆகியவற்றுக்குச் சொந்தமான நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அநுராதபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருள் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(i) மேற்படி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்குறித்த அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கருத்திற்கொண்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2857/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துணைமைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பணியாட்டொகுதியில் நிறைவேற்று மற்றும் கனிஷ்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) நிறைவேற்று மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதிகளில் காணப்படுகின்ற ஒவ்வொரு பதவிக்கும் உரித்தான மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு ஊழியர் மற்றும் அவரின் குடும்பத்திற்காக வழங்கப்பட்டுள்ள காப்புறுதி உரித்தின் பெறுமதி தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3647/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்தியங்கனை ரஜமஹா விகாரை, மஹியங்கனை ரஜமஹா விகாரை, மற்றும் கதிர்காமம் கொயில் என்பவை ஊவா மாகாணத்தில் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) சமய மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் பதுளை மாவட்டம் உட்பட ஊவா மாகாணத்தில் பல ரஜமஹா விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள ரஜமஹா விகாரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தொல்பொருள் சட்டங்களுக்கு அமைவாக மேற்படி ரஜமஹா விகாரைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(iv) பசறை, போகொடை, தோவ, முத்தியங்கனை மற்றும் மஹியங்கனை ரஜமஹா விகாரைகளையும் ஏனைய ரஜமஹா விகாரைகளையும் பேணிப் பாதுகாப்பதற்காக இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பௌத்த மக்களுடைய சமய கலாசார பின்னணிக்கமைவாகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க மரபுரிமையைப் பாதுகாக்கும் வகையிலும் மேற்படி பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மரபுரிமைகளை எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதி பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3678/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1997.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்ட;

(ii) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்ட;

(iii) 2021.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்ட;

(iv) 1997.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் பின்னர் 2021.12.31 ஆம் திகதியளவில் மரணமடைந்துள்ள;

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கையினை ஒவ்வொரு சேவைக்கமைவாக வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1997.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் விதவைகள் அநாதைகள் / தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் எண்ணிக்கை மேற்குறித்த ஒவ்வொரு சேவை மற்றும் ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 நவம்பர் 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி மோசடி தொடர்பில் விசாரிப்பதற்காக சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைக் குறிப்புகளுக்கேற்ப மேற்கூறப்பட்ட செயற்பாடு தொடர்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டுள்ளார்களென குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3506/2023

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்காக பேணிவரப்படுகின்ற சேமலாப நிதியத்தின் கணக்கு மீதிக்கென 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(ii) ஊழியர் சேமலாப நிதியத்தின் (E.P.F) கணக்கு மீதிக்கென 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(iii) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் (E.T.F) கணக்கு மீதிக்கென 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு நிதியங்களினதும் கணக்கு மீதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதங்களுக்கு இடையே வித்தியாசம் காணப்படுமாயின், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3514/2023

கௌரவ அசங்க நவரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அரச பாடசாலைகளில் தற்போது சேவையாற்றி வருகின்ற அதிபர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அதிபரினதும் பெயர், கடமை முகவரி, தனிப்பட்ட முகவரி, தொலைபேசி இலக்கம், அதிபர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி, தற்போது வகிக்கும் தரம் மற்றும் ஓய்வுபெறவுள்ள திகதி என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச பாடசாலையொன்றில் அதிபர் பதவியை வகிக்கக்கூடிய காலஎல்லை தொடர்பாக நிரல் அமைச்சினால் அல்லது வடமேல் மாகாண கல்வி அமைச்சினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானம் யாது;

(iii) அதிபர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் 2023.01.01 ஆம் திகதியின் பின்னர் வடமேல் மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கைசார் தீர்மானங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3521/2023

கௌரவ உத்திக பிரேமரத்ன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனைத்து வகையிலான திரைப்படங்களையும் திரையிடக்கூடிய வசதிகளைக் கொண்ட இலங்கையின் திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி திரையரங்குகள் மூலம் ஈட்டப்படுகின்ற வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் திரைப்படக் கைத்தொழில் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தை அதிகரிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) திரைப்படக் கைத்தொழிலின் எதிர்காலம் மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3539/2023

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கை மேற்கொண்டுள்ள ஏற்றுமதிகளின் பெறுமதி;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மேற்கொண்டுள்ள ஏற்றுமதி களிலிருந்து பெறப்பட்டுள்ள அந்நியச் செலாவணி வருமானம்;

ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இறக்குமதிகளுக்காக அங்கீகரித்துக்கொள்ளப்பட்ட அந்நியச் செலாவணியின் அளவு;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இறக்குமதிகளின் பெறுமதி;

ஐக்கிய அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3549/2023

கௌரவ லலித் வர்ண குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை, ஹொரணை மற்றும் மத்துகம ஆகிய ஒவ்வொரு கல்வி வலயத்திலுமுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் இன்றளவில் நிலவும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அண்மையில் கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் நியமிக்கப்பட்ட தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுமார் 620 மாணவர்கள் கல்வி கற்கும் களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள களு/அல்-ஹசனியா மகா வித்தியாலயத்தில் கணிதப் பாட ஆசிரியர் வெற்றிடம் உள்ளிட்டதாக இன்றளவில் 15 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பாடசாலையில் போதுமானளவு கட்டட வசதிகள் இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) கொடைவள்ளல்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது இறுதிக் கட்டத்தில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி 12 வகுப்பறைகளுக்கும் மேசை மற்றும் கதிரை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3570/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அரச ஊழியர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3596/2023

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சனாதிபதி செயலகத்தில் இயங்கி வருகின்ற விசேட கருத்திட்ட அலகினூடாக 2022.07.14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலகில் தற்போது பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பதவி, சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி அலகில் பணியாற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரும் அரசியல் கட்சியொன்றில் முழுநேர ஈடுபாடுடையவர்கள் என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) மேற்குறித்த அலகினைப் பராமரிப்பதற்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3645/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பதுளை டிப்போவினால் பதுளை நகரிலிருந்து தெமோதர ஊடாக வேவெல்ஹின்ன வரை; மடுல்சீமை - குருவிகொல்ல ஊடாக கொக்காகல வரை; லுனுகல ஊடாக பல்லேகிருவ வரை; தெமோதர ஊடாக ஓதும்ப வரை; ரொக்கதென்ன வரை மற்றும் ரொசட் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பஸ் வண்டிகள் உட்பட ஏனைய துணை வீதிகள் பலவற்றில் பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக தோட்டப்புற பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக பதுளை நகருக்குச் செல்லும் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) அச்சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3672/2023

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் கடமையாற்றிய அமய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் தற்காலிக பணியாளர்கள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நீக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கப்பட்டிருக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அத்தகைய பணியாளர் ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) இவர்கள் நீக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீக்கப்பட்டிருக்கும் அந்தப் பணியாளர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத் திகதி யாது என்பதையும்;

(iii) அத்தகைய பணியாளர்கள் சம்பந்தமாக இன்றளவில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2023 நவம்பர் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

387/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு மழைக்காலத்தில் மண்சரிவுக்கு உள்ளான கொழும்பு-கண்டி பிரதான பேருந்து வீதியில், பஹல கடுகண்ணாவைப் பிரதேசத்தின், மேற்பகுதியில் புகையிரத வீதிக்கு அருகிலுள்ள பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் இதுவரையிலும் நீங்கவில்லை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தினது மண் அடுக்கின் கீழ் காணப்பட்ட நீர் வடிப்பினை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அகற்ற நடவடிக்கை எடுத்தபோதும், அந்தப் பிரதேசம் தொடர்ந்தும் தீவிர அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்தப் பிரதேசத்தை அபாய நிலையிலிருந்து மீட்க இன்றளவில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் பயணிப்பதற்கு உள்ள மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கடுகண்ணாவை தொடக்கம் பலன புகையிரத நிலையம் வரையுள்ள புகையிரத வீதி எப்போதும் மண்சரிவைச் சந்திக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளதால், அதுகுறித்து ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

423/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சாரப் பட்டியல்களுக்கான செலவுகளைக் குறைப்பதன் நோக்கத்துடன் அரச ஊழியர்கள் சார்பில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட ‘சூரிய மின்சக்தி வசதிக்கான விசேட கடன் திட்டம்’ நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அக்கடன் திட்டத்தின் கீழ் அரச ஊழியர் ஒருவருக்கு வழங்குவதற்காக உத்தேசித்துள்ள கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி வீதம் என்பன யாவையென்பதையும்;

(iv) அக்கடன் திட்டத்தின் கீழ் இன்றளவில் கடன் வழங்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை என்பன யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

436/2023

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒரு கிலோகிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் 400 கிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் —

(i) விற்பனை செய்யப்படும் விலை;

(ii) அவற்றைப் பயன்படுத்தி தயார் செய்யக்கூடிய பால் லீற்றர்களின் அளவு;

(iii) அவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் திரவப்பால் லீற்றர்களின் அளவு;

ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற திரவப்பால் பக்கெட்களின் கொள்ளளவு மற்றும் மேற்படி கொள்ளளவுக்கு அமைய ஒவ்வொரு திரவப்பால் பக்கெட்டின் விலை என்பன தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

690/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவின் துறைநீலாவணை பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராமிய வைத்தியசாலை இன்றளவில் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக இரண்டு மருத்துவர்களை நியமிக்க வேண்டியபோதிலும், இன்றளவில் ஒரு வைத்தியர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அந்த மருத்துவருக்கு வேறொரு வைத்தியசாலையிலும் பணிகளை கவனிக்க வேண்டியிருப்பதால், குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) ஆரம்ப காலத்தில் இந்த மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டியொன்று இருந்தபோதிலும் தற்போது நோயாளர் காவு வண்டியொன்று இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்காததன் காரணம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்காமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைக்காக நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கவும், நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்கவும் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

819/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணவரின் மரணம்/கைவிட்டுச் செல்லுதல் மற்றும் வேறு காரணங்களினால் இலங்கையில் கணிசமானளவு பெண்கள் தமது குடும்பப் பொறுப்பை ஏற்று குடும்பத் தலைவர்களாக உள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு குடும்பத் தலைவர்களாக செயற்படும் பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பெண்களுக்கு நிவாரணமளிப்பதற்கு வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) கணவரின் மரணம்/ கைவிட்டுச் செல்லுதல் மற்றும் வேறு காரணங்களினால் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மரணம்/ கைவிட்டுச் செல்லுதல் மற்றும் வேறு காரணங்களினால் தமது மனைவியின்றி கணவரால் குழந்தைகள் பராமரிக்கப்படுகின்ற குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்ப அலகுகளுக்கு நிவாரணமளிப்பதற்கு செயற்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

839/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர்களின் மிகை மற்றும் பற்றாக்குறை நிலவுகின்ற கல்வி வலயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வொரு பாடத்தின் பிரகாரம் யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

853/2023

கௌரவ காமினி வலேபொட,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அமைவாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென தற்போதைய அரசாங்க முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) தற்போது மத்திய அரசாங்கத்தின் வசமுள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) இதன் காரணமாக தற்போது இலங்கை பொலிஸார் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு உறப்படும் செலவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அவ்வாறு திருத்தப்படும் நிதித்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதனால் தற்போதுள்ள இலங்கை பொலிஸ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்படும் மாற்றங்கள் யாவை;

(ii) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதனால் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான தத்துவம் நேரடியாக மாகாண பொலிஸாருக்கு உரித்தாகுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

874/2023

கௌரவ ரோஹண பண்டார,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மீன் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மீன் இனப்பெருக்க நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 நவம்பர் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1464/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது அச் சங்கங்களில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆகக் கூடிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டுள்ள மாவட்டம் யாதென்பதையும்;

(iv) மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1512/2023

கௌரவ கோகிலா குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அரச நிறுவனங்களில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1550/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் கறுவா செய்கையாளர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கறுவா கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) கறுவா செய்கையாளரொருவருக்கு வழங்கப்பட்டுள்ள கறுவா கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கறுவா கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கறுவா கன்றுகளுக்கு மேலதிகமாக கறுவா செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் இதர வசதிகள் யாவை என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கறுவா செய்கையை ஊக்குவிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1586/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அடிக்கடி வெள்ள நிலைமை ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) வருடத்திற்கு இரண்டு மூன்று தடவைகள் வெள்ளத்தில் மூழ்கும் பிரதேசங்கள் அம்மாவட்டத்தில் உள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாது;

(ii) மேற்படி மாவட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை;

(iii) மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1718/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டு பணவனுப்பல்களின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இப்பெறுமதியானது மொத்த அந்நியச் செலாவணி ஈட்டல்களின் சதவீதமாக மேற்படி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கான வெளிநாட்டு பணவனுப்பல்கள் சட்டபூர்வமான வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2020/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் மஹபொல பயிற்சி நிறுவகம் (மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை) இயங்கிவருகின்றது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவகத்தினால் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறிகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ் ஒவ்வொரு பாடநெறிகளும் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி நிறுவகம் எவ்வாறு பயன்படுத்தப்படும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2397/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க நெசவுக் கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) நெசவு உற்பத்திகள் பின்னடைந்துள்ளமையை ஏற்றுக்கொள்வாரா;

(iv) நெசவு உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2552/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 60 வயதைப் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் 2022.12.31 ஆம் திகதியில் ஓய்வுபெறச் செய்யப்பட்ட அரசாங்க ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்களை ஒரே தடவையில் ஓய்வுபெறச் செய்ததன் காரணமாக அரசாங்க பாடசாலை முறைமை செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்டவாறு ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2883/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கால்நடை அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2023 நவம்பர் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1623/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஒவ்வொரு பயிர்ச்செய்கை போகங்களிலும் இடம்பெறுகின்ற வானிலை மாற்றங்கள் காரணமாக மரக்கறி விதை உற்பத்தியில் ஏற்படும் சிக்கல்களை ஆராய்ந்து இதற்கான ஒரு தீர்வாக, பசுமைக்குடில்களில் மரக்கறி விதைகளை உற்பத்தி செய்வதற்கு உகந்ததொரு வேலைத்திட்டத்தை தயார் செய்வதற்காக, 2018ஆம் ஆண்டில் குண்டசாலை விவசாய ஆலோசகர் கமத்தொழில் அமைச்சின் அனுமதியை கோரியுள்ளார் என்பதை அறிவாரா;

(ii) அது தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தில் தனியார் துறைக்குச் சொந்தமான பசுமைக் குடில்களையும் இணைத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்படுகின்றதா;

(iv) ஆமெனில், அப்பசுமைக்குடில்களை மேற்படி வேலைத்திட்டத்துடன் இணைத்துக்கொள்ளும் முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1640/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எரிவாயுவுக்கான தட்டுப்பாடு மற்றும் அதன் அதிகூடிய விலையேற்றம் காரணமாக மாற்று வலுசக்திகளைப் பயன்படுத்துவதற்கு ஏராளமான புத்தாக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) மேற்படி புத்தாக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்காக செலவாகும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடியுமென்பதை அறிவாரா;

(iii) மேற்படி புத்தாக்குநர்களையும் அவற்றின் பாவனையாளர்களையும் ஊக்குவிப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1683/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்திலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் பெரும்பாலான மக்களின் பிரதான வாழ்வாதாரம் விவசாயம் என்பதையும்;

(ii) வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசமானது மிகப் பெரிய பிரதேசமாக காணப்படுவதால் அதற்குரிய கமநல சேவைகள் நிலையத்திற்குச் சென்று சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது மேற்படி விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(iii) வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள சில கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் தமது விவசாய சேவைகளைப் பெறுவதற்காக சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கமநல சேவைகள் நிலையத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கு விவசாய சேவைகளைப் பெறுவதற்காக புதிய கமநல சேவைகள் நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1760/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான மத்திய கலாசார நிதியத்தின் ஊழியர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த விசாரணைகளின்படி இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இதுவரை நிவாரணம் வழங்கப்படாத ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1818/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் குடிநீர் வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி கிராம மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதிகளை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2536/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கென அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் எண்ணிக்கை அவர்களது தொடர்பாடல் மொழியின் அடிப்படையில் யாதென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலையில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2580/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நெல் ஆராய்ச்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆராய்ச்சி நிறுவனத்தினாலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நெல் வகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நெல் வகையையும் பயிரிடுவதற்காக விதந்துரைக்கப் பட்டுள்ள பிரதேசங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2624/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கை முதலீட்டுச் சபையில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3101/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளுள் தரப்படுத்தப்பட்ட அதிபர்களும் பதிற் கடமையாற்றும் அதிபர்களும் சேவையாற்றுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கையானது தனித்தனியே யாதென்பதையும்;

(iii) பதிற் கடமையாற்றும் அதிபர்கள் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு மாகாண அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதிற் கடமையாற்றும் அதிபர்களை அதிபர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இன்றளவில் அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இனிவரும் காலங்களில் அதிபர் பதவியில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும் போது போட்டிப் பரீட்சை நடாத்தி, தகைமையுடையவர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3156/2023

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அதிகளவான குளங்களில் தற்போது ஆக்கிரமிப்புத் தாவரங்கள் வளர்ந்துள்ளன என்பதையும்;

(ii) அத்தாவரங்கள் அழுகி குளத்தின் அடியில் படிவதனால் குளங்கள் நிரம்பி காணப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட குளங்களில் காணப்படுகின்ற ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றுவதற்கான ஒரு வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) நிரம்பியுள்ள குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக தற்போதுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) குளங்களில் வளரும் ஆக்கிரமிப்புத் தாவரங்களை கட்டுப்படுத்துவதற்காக விவசாய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) குளத்தின் ஒதுக்குக் காணிகளையும் குளக் கட்டினையும் பாதுகாப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) குளங்களைப் பாதுகாப்பதற்காக மக்களுடன் ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 7/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.22/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் வழங்கும் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக நகர்ப்புற மற்றும் கிராமிய சமூகம் பெரும் நிலைகுலைவுக்கு உட்பட்டுள்ளமையினாலும், நுண்நிதி மற்றும் குத்தகை கடன் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்களின் தூண்டுதல் காரணமாக கடன் பெற்றுக்கொண்டுள்ள ஏராளமான குடும்பங்கள் தற்போது கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளமையினாலும், அந்த நிறுவனங்களின் வட்டி வீதங்கள் பல்வேறு அளவுகளில் காணப்படுவதனாலும், குத்தகை கடன் தவணைகளைச் செலுத்தத் தவறும் நபர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களின் பல்வேறுபட்ட அழுத்தங்கள் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாவதனாலும், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் நிறுவனங் களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா. 24/2023

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார,— இலங்கையில் ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்கப்படுதல்,— ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாக பணியாற்றுவதன் மூலம் உருவாகும் தனிப்பட்ட தொடர்புகளால் சில பிள்ளைகளுக்கு சிற்சில சந்தர்ப்பங்களில் அநீதிகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்தின் பல்வேறு படிநிலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுடன் பணியாற்றுவதன் மூலம் அவர்களின் மனநிலையை புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இழக்கப்படுவதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன கல்வி முறையொன்றைப் பேணிச் செல்வதில் இடையூறுகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்திலுள்ள உப கலாசாரங்களை புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் நழுவிச் செல்வதாலும், பல்வேறான பிரதேச மொழிகள் மற்றும் கலாசாரங்களிலிருந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளதாலும், கல்வியை வழங்குதல் மற்றும் நற் சமூக பிரஜைகளை உருவாக்குதல் எனும் ஒரே நோக்கம் நிறைவேறும் கல்வி முறையொன்றை உருவாக்குவதற்காக அனைத்து ஆசிரியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடல்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வருடாந்தம் பெற்றோர்களிடமிருந்து தொடர்ச்சியாக அறவிடப்படுவதாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சில பெற்றோர்களுக்கு மேற்படி நிதியினை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதால் அப் பெற்றோர்களின் பிள்ளைகள் வகுப்பறையில் அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புள்ளதாலும், பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினை எவ்வாறு திரட்ட வேண்டும் என்பது தொடர்பாகவும், மேற்படி நிதி தொடர்பான வரவு செலவு அறிக்கைகளை காட்சிப்படுத்த வேண்டிய விதம் தொடர்பாகவும், மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் தொடர்பாகவும் பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

பா. 3/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 8/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திரண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திரண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.25/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல்,— கடந்த காலத்தில் இலங்கையின் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் அலுவலக உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மர தளபாடங்கள் மிக நீண்டகாலம் உபயோகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அந்த நிறுவனங்கள் பயன்படுத்தும் அலுவலக உபகரணங்கள் ஒட்டுப்பலகை மற்றும் ஏனைய செயற்கை தகடு வகைகள்கொண்டு தயாரிக்கப்படுவதால் அவை மிகக் குறுகிய காலத்தில் அழிவடைவதாலும், தற்போதைய இந்த அலுவலக உபகரணங்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் வெளிநாடுகளுக்கு அதிகளவில் பணம் சென்றடைவதாலும், இத்தகைய பொருட்கள் எமது சூழல் தொகுதிக்கு வெளியிடப்படுவதால் பாரிய தாக்கம் ஏற்படுவதாலும், அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாரம்பரிய உள்நாட்டு மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகளை மீண்டும் ஊக்குவித்தல்,— எமது நாட்டின் பாரம்பரிய மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகள் தற்போது பற்றாக்குறையாக இருப்பதால் வெளிநாடுகளில் இருந்து விதைகளை இறக்குமதி செய்வதற்கு பெருந்தொகையான பணம் செலவாகுவதாலும், அவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற விதைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சலில் இருந்து பெறப்படும் விதைகள் மீண்டும் முளைப்பதற்கான திறனை கொண்டிராத காரணத்தாலும், பாரம்பரிய உள்நாட்டு விதைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சல்கள் பூச்சிபீடைகளினால் ஏற்படும் பாதிப்பினை எதிர்கொள்ளும் சிறப்புத் திறனைக் கொண்டிருப்பதாலும், தற்போது இலங்கையில் அருகி வரும் பாரம்பரிய உள்நாட்டு மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகளை மீண்டும் ஊக்குவிப்பதற்கு ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— தொழில்வாண்மையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும்பொருட்டு தொழிற்பயிற்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் ஆட்களிடையே நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெற்றவர்களும் பிறப்பாற்றல் கொண்டு அத்தொழில்களில் ஈடுபடுபவர்களும் இருப்பதாலும், மேசன், மரவேலை, மோட்டார் பொறிவினைஞர், காய்ச்சியிணைத்தல், வண்ணந்தீட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்வதற்கான ஒரு நிறுவனம் இல்லாமையால் ஒரே ஆள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதாலும், தொழில்வாண்மையாளர் ஒருவர் திடீர் விபத்தொன்றைச் சந்தித்துள்ள வேளையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதை எளிமையாக்குவதற்காக அந்த ஆளின் குருதி வகை பற்றிய தகவல்கள் மற்றும் சேவை பெறுநருக்கு தொழில்வாண்மையாளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள் அடங்கிய தொழில் அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளதாலும், தொழில்வாண்மையாளர்களைப் பதிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டையொன்றை வழங்குவதற்காக தொழில்பயிற்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுடன் இணைந்ததான நிறுவனம் ஒன்றைத் தாபிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்குதல்,— அரச சேவையில் இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஓர் இடத்தில் ஐந்தாண்டுகளுக்கு மேல் சேவையாற்றுகின்ற காரணத்தினால் அவர்கள் பெறக்கூடிய அனுபவம் மற்றும் சிறப்புத் தேர்ச்சி பற்றிய அறிவு குறைவடைவதாலும், அதிருப்தி மற்றும் மன அழுத்தம் குறைந்து உற்சாகமாகவும், ஆர்வமாகவும் புத்துணர்வுடனும் கடமையாற்றுவதற்கான வாய்ப்புகளை இழக்கின்றதாலும், ஏற்படக்கூடிய சமூக இடைத் தொடர்புகள் மூலம் முறைகேடுகள், ஊழல் மற்றும் மோசடிகளுக்கு தூண்டப்படக்கூடும் என்பதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன சேவையினைப் பேணுவதில் இடையூறுகள் ஏற்படக்கூடுமென்பதாலும், பிராந்திய நிருவாகத்தின் பல்வேறு அனுபவங்கள் அதிகரிக்கும் சாதகமான தாக்கம் குறைவடையுமென்பதாலும், வினைத்திறன்மிக்கதும் சிறந்ததுமான அரச சேவையினை நிறுவும் பொருட்டு இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை மாணவர்களை வாரத்தில் ஒரு நாள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்,— பல்வேறு விடயங்களின் காரணமாக பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமையினால் அவர்களது மன அழுத்தம் அதிகரித்துள்ளதாக சமூக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமையினாலும், விளையாட்டு, சங்கீதம், சித்திரம், நடனம் போன்ற அழகியல் செயற்பாடுகள் மற்றும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை போன்ற விவசாய செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்களின் உள மற்றும் உடல் வளர்ச்சி ஏற்படுவதாக உளவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளமையினாலும், தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வாரத்தின் ஐந்து நாட்களில், வெள்ளிக்கிழமை போன்றதொரு தினத்தில் கட்டாய இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கான சூழமைவினை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் துரிதமாக வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— அசுத்தமான உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளைத் தரப்படுத்துதல்,— சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற உணவக மற்றும் வெதுப்பக உற்பத்திகளின் தரம் மற்றும் தூய்மைத்தன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதனாலும், சில வெதுப்பக உற்பத்திகளின் அசுத்தம் காரணமாக நுகர்வோர் நோய்வாய்க்கு உட்படுவதற்கான அதிக வாய்ப்பு இருப்பதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கத் தலைவரே தெரிவித்திருப்பதனாலும், இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் தலையீட்டுடன் அசுத்தமான உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை தரப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— இணையவழி ஊடாக தருவிக்கப்படுகின்ற பொருட்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— பாவனையாளர்கள் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை இணையவழி ஊடாக பெற்றுக்கொள்வதில் அதிகரித்த போக்கு இன்றளவில் உருவாகியுள்ளதனாலும், மேற்படி பொருட்களை நுகரும் போது பாவனையாளர்களுக்கு ஏற்படும் ஒவ்வாமைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்காண்பதற்கான இயலுமை காணப்படாமையினாலும், இதன் காரணமாக சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் பிரிவினைகள் ஏற்படுவதன் மூலம் மோதல்கள் உருவாக பெரும்பாலும் வாய்ப்புள்ளதனாலும், இணையவழி ஊடாக தருவிக்கப்படுகின்ற பொருட்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 37/2023

கௌரவ ஜகத் சமரவிக்ரம,— இலங்கையில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் பணியாட்டொகுதியினரின் பங்கேற்புடன் பயிர்ச்செய்கை வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— எமது நாட்டில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் பணியாட்டொகுதியினரின் பங்கேற்புடன் பழவகை, மரக்கறி மற்றும் கிழங்கு வகைகளை பயிரிடுவதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் என்பதனாலும், நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறைக்கு அது ஒரு தீர்வாக அமையும் என்பதனாலும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டுள்ள அரச ஊழியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு கண்ணொருவ மற்றும் வேறு பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ள விவசாயப் பயிற்சி நிலையங்களின் ஊடாக விசேட பயிற்சியினை வழங்கி, நாடளாவிய ரீதியில் உணவுப் பயிர்கள் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல் மற்றும் மிகவும் வெற்றிகரமான பயிர்ச்செய்கைகளைத் தெரிவு செய்து தேசிய மட்டத்தில் பாராட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2023

கௌரவ ஜகத் சமரவிக்ரம,— கறவைப் பசு வளர்ப்பினை வனப்பூங்காக்களில் மேற்கொள்ளல்,— இலங்கையில் திரவப் பால் மற்றும் பால் மா நுகர்வானது அதிகமாக காணப்படுவதாலும், கறவைப் பசுக்களுக்கு அவசியமான புல்லைப் பெற்றுக்கொள்ள இயலாத காரணத்தால் பாற் பண்ணையாளர்கள் ஊக்கமிழந்துள்ளதாலும், உள்நாட்டு பாலுற்பத்தி போதுமானதாக இல்லையென்பதால் பால்மா இறக்குமதிக்கு பெருந்தொகை பணம் செலவு செய்யப்படுவதாலும், சட்டவிரோதமாக வனப்பூங்காக்களில் கறவைப் பசுக்களை பட்டி அடைப்பதால் பாற்பண்ணையாளர்கள் கைது செய்யப்படுவதாலும், உண்மையான பாற்பண்ணையாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கென அடையாள அட்டை வழங்கி கறவைப் பசு வளர்ப்பினை வனப்பூங்காக்களில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— முருங்கைச் செய்கையை விஸ்தரித்தல்,— முருங்கை மற்றும் முருங்கைசார் உற்பத்திகளுக்கு பல உலக நாடுகளிலும், உள்ளூர் சந்தையிலும் அதிக கேள்வி நிலவுவதாலும், கிராமிய மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு முருங்கைச் செய்கை பேருதவியாக அமையும் என்பதாலும், இலங்கைக்கு அதனூடாக அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான இயலுமை உள்ளதாலும், முருங்கைச் செய்கையை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2023

கௌரவ டீ. வீரசிங்க,— விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் பழவகைகளை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தல்,— இலங்கைக்கு பழவகைகளை இறக்குமதி செய்வதற்காக அதிகளவு நிதி செலவிடப்படுவதாலும், நாட்டில் எங்கும் விளையும் மூவகைப் பழங்களான அன்னாசி, பப்பாளி மற்றும் வாழைப்பழம் என்பன தற்போது இறக்குமதி செய்யப்படுவதாலும், பெரியவர்கள் மற்றும் பிள்ளைகளின் விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் இம்மூவகைப் பழங்களை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2023

கௌரவ டீ. வீரசிங்க,— உள்நாட்டு குரக்கன் உற்பத்தியை விஸ்தரித்தல்,— இலங்கையில் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்ட குரக்கன், பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான இயலுமையைக் கொண்டதென ஊட்டச்சத்து நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாலும், தற்போது அதிகளவான குரக்கன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதால் அதற்காக பெருமளவு அந்நியச் செலாவணி செலவு செய்யப்படுவதாலும், உள்நாட்டு குரக்கனின் புதிய வகையினங்களை அடையாளங்கண்டு அவற்றை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்தி உள்நாட்டுக் குரக்கன் உற்பத்தியை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2023

கௌரவ டீ. வீரசிங்க,— பல்வேறு திறன்களைக்கொண்ட மூத்த பிரசைகளை தேசிய பொருளாதாரத்தில் பங்குகொள்ளச்செய்தல்,— மூத்த பிரசைகளில் பெரும்பாலானவர்கள் பல்வேறு தொழில்சார் திறன்களைக் கொண்டவர்களாக இருப்பதாலும், சூழல் நேயம் மிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் அறிவு அவர்களிடம் காணப்படுகின்ற போதிலும் அது தொடர்பில் முறையான கற்றாராய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும், தேசிய பொருளாதாரத்திற்கு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பங்களிப்பை முனைப்புடன் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையொன்று காணப்படாமையாலும், முதியோர் இல்லங்களில் அல்லது தங்களது வீடுகளில் தனிமையில் வாழ்ந்துவரும் மேற்படி மூத்த பிரசைகளை அவர்களது தொழில்சார் திறன்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்து அவ்வுற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதனூடாக அவர்களுக்கான வருமான வழியொன்றை ஏற்படுத்துவதற்கும் மன ஒருமைப்பாட்டை பேணிச் செல்வதற்கு உதவியாக அமைவதற்கும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

ப. 44/2023

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

ப. 45/2023

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2023

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட தேயிலைக் கைத்தொழில் முறைமைக்குப் பதிலாக தேயிலை சிறு தோட்ட முறைமையொன்றினை ஏற்படுத்துதல்,— இலங்கையின் தேயிலைப் பயிர்ச் செய்கையானது பெருந்தோட்டங்கள் மற்றும் தேயிலை சிறு தோட்டங்கள் ஆகிய இருவழி முறைகளைக் கொண்டமைந்திருப்பதனாலும், இதில் பெருந்தோட்ட முறைமையானது ஏற்கனவே வீழ்ச்சியடைந்து வருவதனாலும், பெருந்தோட்ட முறைமையில் மேற்கொள்ளப்படும் தேயிலை பயிர்ச் செய்கையினை சிறு தோட்ட முறைமையாக மாற்றியமைத்து குறித்த தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களை, சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவதன் மூலம் அவற்றினை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/2023

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 48/2023

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/2023

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/2023

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2023

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டல்,— இலங்கையிலுள்ள குடும்ப அலகுகளில் 25% ஆனவை பெண் தலைமைத்துவ குடும்பங்களாக உள்ளதனாலும், அவற்றில் 50% ஆனோர் விதவைகளாக உள்ளதனாலும், இக் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களில் பால்நிலை காரணமாக எழும் சிக்கல்கள், காணி உரித்து பற்றிய சிக்கல்கள், வாழ்வாதார வழிமுறைகள் மட்டுப்படுத்தப்படுதல் காரணமாக எதிர்கொள்ளும் சிக்கல்கள் பிரதானமானவையாக உள்ளதனாலும், ஏற்கனவே வாழ்வாதார தொழிலொன்றில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு போதியளவு பயிற்சி மற்றும் வசதிகள் இல்லாமை, சந்தைப்படுத்தலில் காணப்படுகின்ற சிக்கல்கள், காணிகளின் பின்னுரித்தினைச் சாட்டும்போது ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதன் காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் போன்ற பல சிக்கலான நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ளதனாலும் மேற்படி சிக்கல் நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு நிலைபேறான திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2023

கௌரவ வேலு குமார்,— மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் “முல்லோயா கோவிந்தன்” என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2023

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2023

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,— தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சலுகை முறையில் வழங்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பருவச்சீட்டுக்களை மீண்டும் வழங்குதல்,— பெரும்பாலான தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுள் அதிகமானோர் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், ஒரு நாளைக்கு ஒரு தடவை பயணம் செய்வதற்கு ஒரு மாணவனுக்கு பெருந்தொகை பணம் செலவாகின்ற காரணத்தாலும், பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மாணவர்கள் பாடநெறிகளை பயில்வதற்காக வருகை தருவதாலும், மேற்படி மாணவர்களுக்கு 2022 ஆம் கல்வியாண்டு நிறைவுபெறும் வரையில் சலுகை முறையில் வழங்கப்பட்ட மாணவர் பருவச்சீட்டுக்கள் 2023 ஆம் கல்வியாண்டில் வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தாலும், மேற்படி இடைநிறுத்த அறிவிப்பை இரத்துச் செய்து சலுகை முறையில் வழங்கப்பட்ட மாணவர் பருவச்சீட்டுக்களை மீண்டும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— மனிதனுக்கு மிகவும் பயனுடைய இலுப்பை எண்ணையைத் தயாரித்தல்,— விவசாயத்திற்கும் மனிதனுக்கும் மிகவும் பயனுடைய இலுப்பை எண்ணையைத் தயாரிப்பதற்கு அவசியமான இலுப்பை மரங்களை அதிகரிக்கும் வகையில் வயல்வெளிகளில் இலுப்பை மரங்களை நடுவதற்கும், உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யக்கூடிய இலுப்பை எண்ணையின் பயன்பாடு தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்கும், இலுப்பை எண்ணையின் தரம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விழிப்பூட்டுவதற்கும், இலுப்பை எண்ணையை ஏற்றுமதி செய்வதற்கும் துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 60/2023

கௌரவ லலித் வர்ண குமார,— டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக உயிரியல் கட்டுப்பாட்டு வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் டெங்கு நோயை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டவில்லை என்பதாலும், வருடாந்தம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாலும், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய விஞ்ஞான முறைகள் பின்பற்றப்படாவிடின் நுளம்புச் சுருள்களை உற்பத்தி செய்யும் கம்பெனிகள் பெருமளவில் தேவைப்படுவதையும், நுளம்புச் சுருள்களை விற்பனை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் காரணமாக மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதையும் தடுக்க முடியாது என்பதனாலும் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக தொடர்புடைய துறைகளையும் இணைத்துக்கொண்டு உயிரியல் கட்டுப்பாட்டு வேலைத்திட்டமொன்றினை அரசாங்கம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 61/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— மரகல சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்,— மொனராகலை நகரத்திலும் புறநகர் பகுதிகளிலும் வசிக்கும் 4000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மரகல மலைத் தொடரில் உள்ள நீர் மூலங்களிலிருந்தே குடிநீர் வழங்கப்படுவதாலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தேயிலை மற்றும் கோப்பிச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த இம்மலைத் தொடரில் தற்போது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும், இங்குள்ள லயன் குடியிருப்புகளில் அதிகளவான மக்கள் வசிப்பதாலும், இங்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காகவும், பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் காடுகளை வெட்டி துப்பரவுச் செய்வதும், காடுகளுக்கு தீ வைப்பதும் பாரிய சுற்றாடல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாலும், இவ்வாறு அழிவடைந்துவரும் சூழல் தொகுதியையும், நீர் மூலங்களையும் பாதுகாப்பதற்காக வர்த்தமான அறிவித்தல் மூலம் இப்பிரதேசம் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ளதாலும், இப்பிரதேசத்தில் உள்ள காடுகள் வெட்டி துப்பரவுச் செய்யப்படுவதையும், வீடுகள் நிர்மாணிக்கப்படுவதையும் நிறுத்துவதற்கும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்குப் பொருத்தமான பிரதேசங்களில் மாற்றுக் காணிகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— சுதேச மருத்துவ நடவடிக்கைகளுக்காக மருத்துவச் சபையொன்றைத் தாபித்தல்,— உலகில் மிகச்சிறந்த கலாசாரத்தைக் கொண்ட இலங்கையின் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் பழமைவாய்ந்த வரலாறு முழுவதிலும் பல இலட்சக்கணக்கான மக்களைக் குணப்படுத்திய சுதேச பாரம்பரிய மருத்துவர்களினதும் சுதேச மருத்துவத்தினதும் எதிர்காலத்தை நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்காகப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்பதால், சுதேச மருத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இம்மருத்துவ முறையையும் மருத்துவர்களையும் பேணிப்பாதுகாத்து வளர்ப்பதற்காக சுதேச மருத்துவர்களைக் கொண்டமைந்த சுதேச மருத்துவச் சபையொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— பின்தங்கிய மற்றும் குறைந்த வசதிகளைக்கொண்ட பிரதேசங்களில் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்ற பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாத்தல்,— வடக்கு மற்றும் வன்னிப் பிரதேசங்களிலும் பின்தங்கிய பிரதேசங்களிலும் அழிவுற்ற நிலையுள்ள பான்சாலைகளையும் வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த வணக்கஸ்தலங்களையும் பாதுகாப்பதற்கும் குறித்த தலங்களை அரச நிதியைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— கைவிடப்பட்ட நிலையிலுள்ள புலம்பெயர் தொழிலாளர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருதல்,— இலங்கைக்கு அதிகளவான அந்நியச் செலாவணியை ஈட்டித் தருபவர்களாக புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளதாலும், போலியாக தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் மனித வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் செயற்பாடு காரணமாக தொழிலாளர்கள் பல மத்திய கிழக்கு நாடுகளில் நிர்க்கதியாகியுள்ளதாலும், அவர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்து வருவதற்கு துரிதமான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— ஆக்கிரமிப்புக் களைகளினால் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரியல் பல்வகைமைக்கும் விக்டோரியா உள்ளிட்ட நீர்த்தேக்கங்களுக்கும் ஆக்கிரமிப்புக் களைகளினால் பாரிய சேதம் ஏற்படுவதாலும், ஏற்கனவே, விக்டோரியா நீர்த்தேக்கத்தின் சில வலயங்களுக்கு அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாலும் இந்த ஆக்கிரமிப்புக் களைகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— உள்நாட்டு நெல்லினங்கள் பயிரிடப்படுவதை மேம்படுத்துதல் மற்றும் புதிய நெல்லினங்களை அறிமுகம் செய்தல்,— உள்நாட்டு நெல்லினங்கள் தொடர்பாக விவசாயிகளை விழிப்புணர்வூட்டி அவற்றை பயிரிடுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குதல் மற்றும் உலகில் புதிதாக விருத்தி செய்யப்படுகின்ற அதிக விளைச்சலைத் தரும் நெல்லினங்களை இந்நாட்டுக்குத் தருவித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உள்நாட்டு விவசாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுத்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— இளம் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக சலுகைக் கடன் திட்டமொன்றை ஏற்படுத்துதல்,— தொழிலின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு மத்தியிலிருந்து தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக வங்கிக் கட்டமைப்பின் ஊடாக சலுகை வட்டி வீதத்தின் கீழ் அவர்களுக்கு கடன் வசதிகளை வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2023

கௌரவ ஹேஷா விதானகே,— மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம்,— எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு துறையிலும் தீவிரவாதக் கருத்துக்கள் காணப்படுவது மிகவும் பாதகமானது என்பதாலும், உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பின்னர் மதத் தீவிரவாதம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டிருப்பதாலும் மதத் தீவிரவாதம் உருவாவதையும் ஊக்குவிக்கப்படுவதையும் தடுப்பதற்கும் ஏற்கனவே அதற்கு இரையாகியுள்ள நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் துரித வேலைத்திட்டமொன்றை அசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/2023

கௌரவ ஹேஷா விதானகே,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/2023

கௌரவ ஹேஷா விதானகே,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.